உ

சிவமயம்

யா/ கலாநிதி ஆ.தியாகராசா மத்தியமகா வித்தியாலயம்

காரைநகர் இந்துக்கல்லூரி

# பழைய மாணவர் சங்கம்

## ஆண்டறிக்கை

## (2004 – 2011)

# நிர்வாகசபை - 2004

| | |
|---|---|
| தலைவர்: | பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை |
| உபதலைவர்கள்: | பேராசிரியர் வே. தர்மரத்தினம் |
| | திரு. வி. குலரத்தினம் |
| செயலாளர்: | திரு. வே. சபாலிங்கம் |
| உபசெயலாளர்: | திரு.ந. கணேசமூர்த்தி |
| பொருளாளர்: | திரு. ஜெ. தில்லையம்பலவாணர் |
| உபபொருளாளர்: | திரு.கா. குமாரவேலு |

## நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு.ந. இராஜசிவம்

திரு. இ. திருப்புகழூர் சிங்கம்

திரு. ந. பாரதி

திரு.ந. சோதிநாதன்

திரு. கோ. ஶ்ரீவரதன்

திருமதி. வீரமங்கைஸ்ராலினா

திரு. வி. சற்குணராசா

உ
சிவமயம்

# யா / கலாநிதி. ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் (காரைநகர் இந்துக்கல்லூரி)

## பழைய மாணவர் சங்கம் – செயலாளர் அறிக்கை (01.06.2004 – 30.09.2011)

வெள்ளைக் கொம்பன் விநாயகப்பெருமானை வழுத்திக் கொண்டு சபையில் உள்ள பேரன்பு மிக்க பெரியோர்களே, கல்லூரியில் பற்றும் பாசமும் கொண்ட பழைய மாணவர்களே, உங்கள் அனைவருக்கும் அன்பு வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு கடந்த ஏழு ஆண்டு காலத்திற்கான ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

முதலில் ஏழு ஆண்டு வரை பொதுக்கூட்டம் நடத்த முடியாமைக்குரிய காரணத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இச்சங்கத்தின் தலைவர்களாக விளங்கிக் கொண்டிருக்கும் அதிபர்கள் மாறிக் கொண்டிருந்தமையாலும் சங்கப் பொருளாளர் திரு. ஜெ. தில்லையம்பலவாணர் திடீரென மறைவுற்ற காரணத்தாலும் ஆண்டுக் கூட்டங்களை நடத்த முடியாமையிட்டுச் சங்கம் சார்பில் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2004.07.02ம் திகதி நடைபெற்ற வருடாந்த

பொதுக்கூட்டத்தில் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்கள் தலைவராகவும், திரு. வே. சபாலிங்கம் அவர்கள் செயலாளரா கவும், திரு.ஜெ.தில்லையம்பலவாணர் அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தலைவராகிய பண்டிதர் 19.08.2005இல் ஓய்வு பெற்ற போதும் தொடர்ந்தும் தலைவராக கடமையாற்றுமாறு நிர்வாக சபையினர் வேண்டியதற்கிணங்க ஏற்று 31.04.2006 வரை கடமையாற்றினார்.

எமது சங்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. எமது சங்கத்தில் 80 ஆயுட்கால அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். எமது சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பெருந் தொண்டாற்றிய பொருளாளர் திரு. ஜெ. தில்லையம்பலவாணரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது ஆகும். அன்னாரின் குடும்பத்தி னருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

01.06.2004 - 31.03.2006 வரையுள்ள காலப்பகுதியில் கட்டடத் திருத்தங்களும் கட்டி முடிக்கப்பட்டன. சங்க நிதி உதவியுடன் 60' x 25' சதுர அடிக் கீழ்மாடிக் கட்டிடம் கதவுகள் நிலைகள் போடப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டன. G.T.Z நிறுவனத்தின் உதவியுடன் 110'x 25' சதுர அடி கொண்ட ஐந்து வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு சாந்தியும் முடித்து வகுப்புக்களும் தொடங்கப்பட்டன. மேற்கூறிய இரு கட்டிடங்களின் மேல் மாடிக் கட்டடம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவனத்தின் உதவியுடன் 170' x 25' நீள அகலப் பகுதியில் எட்டு வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டன. வடக்குப் பக்கத்தில் இருக்கும் மாடி கட்டடம் விஞ்ஞான ஆய்வு கூடமும் வகுப்பறைகளும் நிக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இக்காலப் பகுதியில் கட்டி

முடிக்கப்பட்டு கட்டடச் சாந்தியும் மேற்கொள்ளப்பட்டன. இக் கட்டடச் சாந்தியின் போது பெற்றார் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் தியாகராசா மகேஸ்வரன் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது. பல கோடி ரூபா பெறுமதியான புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இது பெரும் சாதனையாகும். இதனால் நூற்றாண்டு விழாவினர் கண்ட கனவை பதினாறு வருடங்களின் பின் நனவாக்கியுள்ளோம் என்பதில் பெருமையடைகின்றோம்.

G.T.Z நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவனம், நிக்கொட் நிறுவனம் இலண்டன் காரை நலன் புரிச்சங்கம் ஆகியவற்றுக்கும் இந்நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயலாற்ற எமது சங்கத்திற்கு வழிகாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன், வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் திரு.வே. சாம்பசிவம் ஆகியோருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கல்லூரியின் நீர் விநியோகத் தேவையை நிறைவு செய்யும் வகையில் கல்லூரி பழைய மாணவரும் தற்போது பிரான்சில் வசிப்பவருமாகிய திரு. கணேசு மயில்வாகனம் அவர்கள், தமது மாமனார் அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக 23' அடி உயரமான நீர்த்தாங்கியையும், நீர் விநியோகத்திற்கான குழாய் அமைப்புக்களையும் அமைத்துத் தந்துள்ளார். திரு. கணேசு மயில்வாகனம் அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்காக கனிஷ்ட பிரிவு தொடக்கம் உயர்தர வகுப்பு வரையுள்ள வகுப்புகளுக்கு போதிக்க ஆசிரியரில்லாத விடத்து தகுதி வாய்ந்த ஆசிரியரை குறைந்த நிதிக் கட்டணத்துடன் நியமித்து பாடங்கள் கற்பிப்பதற்கு நிதி உதவியை வழங்கி வந்துள்ளோம். இதனால் 2004 இல் க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்கள் ஆங்கில மொழியில் 39 சதவீத மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இதற்கு முன்னர் 12 சதவீதமே சித்தி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 2004ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறு அடிப்படையில் எமது கல்லூரி தீவக வலயத்தில் முதலிடமும் யாழ் மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களைச் சேர்ந்த 216 கல்லூரிகளில் 16 வது இடத்தைப் பெற்றுள்ளது. கிராமச் சூழலில் அமைந்த நம் கல்லூரி நிதி வளம் மிக்க கல்லூரிகளுடன் போட்டியிட்டு பதினாறாம் நிலையைப் பெற்றதென்றால் எமது பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியும் இவ்வித்தியாலய ஆசிரியர்களின் ஒத்துழைப்புமே காரணமாகும். என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். கல்விப் பெறுபேற்றில் 16வது இடத்தைப் பெற்றமைக்காக கற்பித்த ஆசிரியர்களுக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்து பெருவிழா நடத்தப்பட்டது. இவ்விழாவிற்கு பத்தாயிரம் ரூபா நிதியை அன்பளிப்புச் செய்த இலண்டன் வாழ் வேலுப்பிள்ளை நடராசா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை கணினி போதிக்க சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. முதல் அணியில் 24 மாணவரும் 2ம் அணியில் 20 மாணவர்களும் 3ம் அணியில் 25 மாணவர்களும்

பயிற்சி பெற்றனர். 2005ல் க.பொ.த சாதாரண பரீட்சை எடுத்த மாணவர்களுக்குப் பெறுபேறு வரும் வரையும் பாடசாலை நேரத்தில் 20 மாணவர் களுக்கு கணினி பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி வழங்குவதற்கு தகுதி வாய்ந்த கல்லூரி ஆசிரியர்களுடன் மேலதிகமாக யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்துப் போதித்து வந்துள்ளோம். இக்கணனி பயிற்சிப் போதனாசிரியர்களுக்கு நிதி உதவி வழங்கிய கனடா கலாசார மன்றத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றுக்கு மாவட்டம், தேசிய மட்டம் வரை மாணவர்கள் சென்று வெற்றியீட்டியுள்ளார்கள். இவர்களை அழைத்துச் செல்லும் ஆசிரியர்களின் போக்குவரத்துச் செலவுகளை சங்கம் ஏற்றுக் கொண்டது.

மாணவர்களின் மதிய உணவுத் திட்டம் தரம் 9 வரையும் இருந்த போதும் தரம் 11 வரை வழங்கி மேலதிக வகுப்புக்களையும் நடத்த உதவியுள்ளோம். இதற்கான மேலதிக செலவுகள் சமையல் உதவியாளரின் நிதி போன்றவற்றை சங்கம் அன்பர்களிடம் பெற்று வழங்கியுள்ளது. கனடாவில் வசிக்கும் முன்னாள் உப அதிபர் திரு. தம்பிராசா (களபூமி) அவர்கள் இதற்காக நிதி உதவியமைக்காக சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெறுமையான கட்டடத்துடன் பொறுப்பேற்ற நூலகம் துரித கதியில் வளர்ச்சியடையச் செய்துள்ளோம். புதிய நூல்களைக் கொள்வனவு செய்தும், பல நிறுவனங்களிடம் உதவி கோரி

நூல்களை வாங்கியும், நூலகத் தளபாடங்களைப் பெற்றும், நூலக உதவியாளருக்கு நிதி உதவி வழங்கியும் வளர்ச்சி பெற்ற நூலகமாக மாற்றியுள்ளோம். இதனால் தீவக வலயத்தில் முதன்மையான நூலகம் எனத்தெரிவு செய்யப்பட்டு தேசிய நூலக தின விழாவில் எமது கல்லூரிக்கு விருதும் சான்றிதழும் பெற வைத்துள்ளோம்.

1969ம் ஆண்டில் அமரர் கலாநிதி. ஆ. தியாகராசா அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் சயம்பு மலர் வெளிவந்துள்ளது. அதன் பின்னர் 2005ம் ஆண்டு சங்கத்தினதும் அதிபர் ஆசிரியர் ஆகியோரின் செயற்பாட்டினாலும் (36 ஆண்டுகளுக்குப் பின்) வெளிவந்திருப்பது பெருமைக்குரிய செயலாகும். இம் மலரை வெளியீடு செய்ததால் 2,30693 ரூபாவை நிகர இலாபமாகச் சங்கம் பெற்றுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

சபைக்கு பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கிய தலைவருக்கு சங்கம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். 01.04.2006ல் சபையின் தலைவராக திரு.கா.குமாரவேலு அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். இவர்காலத்தில் கனிஷ்ட வித்தியாலயம் எழுச்சி பெற்ற காலமாக விளங்கியது. கனிஷ்ட பிரிவு மாணவர்களின் நீர்த்தேவையை நிறைவு செய்ய கிணறு ஒன்று உருவாக்கப்பட்டது. நீர் விநியோகத்திற்கு குழாய் பொருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. கனிஷ்ட வித்தியாலயத்தின் பிரதான மண்டபம் திருத்தப்பட்டது. பழைய தளபாடங்கள் திருத்தப்பட்டு தீந்தை அடிக்கப்பட்டன. மேலும் மின் இணைப்புகள் பொருத்தப்பட்டு மின்சார வசதிகள்

வழங்கப்பட்டுள்ளது. ஆறு இலட்சத்துக்கு மேலாகக் கனிஷ்ட பிரிவுக்கு உதவியுள்ளோம். காரை இலண்டன் நலன் புரிச்சபையின் தலைவராக இருந்த திரு. சபாபதி சபாரத்தினம் அவர்களின் உதவியால் நாலு இலட்சத்து எண்பத்து மூவாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி உதவியை இலண்டன் காரை நலன்புரிச் சங்கம் வழங்கியமைக்கு சங்கம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர் காலப்பகுதியில் போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கான நிதியை 2005ம் ஆண்டு திரு. ஆனந்தமனோகரன் அவர்கள் ஜேர்மனியில் நிதிசேர்த்து 1,56,000/= ரூபா வரையில் சேகரித்து அனுப்பியுள்ளார். அவருக்கும் நிதி உதவிய ஜேர்மன் வாழ் காரை அன்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சங்கத்தின் கருத்தை ஏற்றுச் செயற்பட தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். 01.10.2008ல் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்ற திரு. A . குமரேசமூர்த்தியவர்கள் சபையின் தலைவராகச் செயல் பட்டார். காரியாலய அலுவலக செயற்பாட்டில் அதிக கவனமெத்துச் செயல்பட்டுள்ளார். 15/06/2010 இல் திரு. பொ. சிவானந்தராசா அவர்கள் கல்லூரி அதிபராகவும் சங்கத்தலைவரா கவும் பொறுப்பேற்றுக் கொண்டார். இவருக்கு சங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

கல்லூரியின் வளர்ச்சி கருதி இத்தகைய நல்ல செயற்பாடுகளை எமது காலப்பகுதியில் எம்மால் இயன்றவரை நிறைவேற்றியுள்ளோம். இதற்கு பழைய மாணவர்கள் பலரது

ஒத்துழைப்பையும் பெறவேண்டி இருந்தது. தேவையான நிதிஉதவியினை வழங்கி வெளிநாடுகளில் உள்ள சங்கங்கள், மன்றங்கள் எமது சங்க அனுமதியினைப் பெற்று வெளிநாடுகளில் இருந்து நிதி சேகரித்து உதவி வழங்கியவர்கள். கல்லூரிக்கு நேரடியாக வருகை தந்து அபிவிருத்திவேலைகளைப் பார்வையிட்டு நிதிஉதவி வழங்கியவர்கள் பல்வேறு விதத்திலும் பாடசாலை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும், இக்கணக்கறிக்கையைப் பரிசீலித்து இலவசமாக தயாரித்து வழங்கிய கணக்காளர் சி.வெற்றிவேலாயுதம் அவர்களுக்கும் எம்மோடு பல்வேறு விதத்திலும் ஒத்துழைத்து செயற்பட்ட நிருவாக சபை உறுப்பினர்களுக்கும், இக் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உங்கள் அனைவரது ஆதரவினை வேண்டி நிற்கிறேன்.

வணக்கம்

**வே.சபாலிங்கம்**
**செயலாளர்**

உ
சிவமயம்

# அதிபர் அறிக்கை

## [15.06.2010 முதல் 03.12.2011 வரை]

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய பழைய மாணவர்களே!

உங்களிற்கு கல்வியோடு, ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் ஊட்டி வளர்த்த கல்லூரிக்கு நீங்கள் வருகை தந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இன்று உங்கள் முன்னிலையில் இப்புகழ்பூத்த மண்டபத்தில் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய கல்லூரித்தாய்க்கும் இம்மண்டபத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கல்வித் தாயாம் சரஸ்வதிக்கும் முதலில் எனது வணக்கத்தைத் தெரிவிக்கின்றேன்.

இக்கல்லூரி ஏறக்குறைய 123ஆண்டுகளாக எமது மக்களுக்கு ஒழுக்கத்துடன் கூடிய கல்வியையும் சமய பண்பாட்டையும் வழங்கி வருவதை நீங்கள் யாவரும் அறிந்ததே. நீண்ட பாரம்பரியத்தைக்கொண்ட இக்கல்லூரி பல பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும், பேராசிரியர்களையும், கல்விமான்களையும், நிர்வாகசேவை அதிகாரிகளையும், சமய அறிஞர்களையும், தொழிலதிபர்களையும், மிகச்சிறந்த அரசியல்வாதிகளையும் எமது கிராமத்துக்கும். உலகிற்கும் வழங்கி தனது பாதையில் தொடர்ந்து வீறுநடைபோட்டு வருவதையிட்டு உங்களுடன் சேர்ந்து நானும் மகிழ்வடைகின்றேன். இக்கல்லூரித்தாயின் மடியில் வளர்ந்த பலர் இன்று உலகெங்கும் எமது கல்லூரியைப் பார்த்த வண்ணமும், உதவி செய்த வண்ணமும் உள்ளனர். அவர்கட்கெல்லாம் இன்று உங்கள் முன்

கல்லூரிச்சமூகம் சார்பாக நன்றி கூறுவதுடன், அவர்களது வாழ்வு சிறக்க வேண்டும், கல்லூரியை அரவணைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

"நன்றி மறப்பது நன்றல்ல" என்ற வாக்கிற்கிணங்க அவர்களை வளர்த்து இந்நிலைக்கு உயர்த்திய கல்லூரி அன்னையின் தேவைகளை நிறைவேற்ற அவர்களை அன்புடன் அழைக்கின்றேன். எது எவ்வாறெனினும் அவர்களது வாழ்க்கையில் எமது கல்லூரிப்பாரம்பரியம் ஜொலித்துக் கொண்டேயிருக்கும்.

**அன்பான பழைய மாணவர்களே!**

நீங்கள் இக்கல்லூரியிலிருந்து எந்த வெளியீடுகளை எதிர்பார்க்கின்றீர்களோ அதை நானும் எனது நல்லாசிரியர் குழாமும், உங்களுடனும், பெற்றோர்களுடனும் சேர்ந்து நிச்சயம் வழங்குவோம் என இச்சந்தர்ப்பத்தில் உறுதி கூறுகின்றேன்.

நீங்கள் இக்கிராமத்தில் பிறந்ததையிட்டும் நீண்ட நல்ல பாரம்பரியங்களைக் கொண்ட இக்கல்லூரியில் கல்வி பெற்றதையிட்டும் நிச்சயம் மகிழ்வடைவீர்கள். இக்கல்லூரி பல சவால்களையும்,இடர்களையும்,இடப்பெயர்வுகளையும் சந்தித்தும் இன்று தலைநிமிர்ந்து சேவையை வழங்குவதையிட்டு உங்களுடன் சேர்ந்து நானும் மகிழ்வடைகின்றேன். இக்கல்லூரியின் பெயரும், கொடியும் என்றென்றும் பட்டொளி வீசி உலகெங்கும் பறக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. இதற்காக நாம் எம்மிடையே உள்ள பேதங்களை மறந்து எல்லோரும் இன்று ஒன்றாக சேர்ந்து எமது கல்லூரியை ஒரு முன்மாதிரியான கல்லூரியாக மாற்றி எமது ஊருக்குப் புகழ்

சேர்க்க வேண்டும். என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மதிப்பார்ந்த பழைய மாணவர்களே!**

எமது கல்லூரியின் தேவைகள் நிறையவே உண்டு. இன்றுவரை பழைய மாணவர் சங்கம் செய்த சேவை அளப்பரியது. அவர்கள் கல்லூரித்தேவைகளை உடனுக்குடன் அறிந்து உதவி செய்து வந்தார்கள். பல கஸ்டங்கள், போராட்டங்களின் மத்தியிலும் அவர்கள் பழைய மாணவர்களின் உதவியுடன் சிறப்பாக தமது சேவையை வழங்கியமையையிட்டு அவர்களை பாராட்டி நன்றி தெரிவிக்கின்றேன். திரு,வே.சபாலிங்கம் அவர்கள் பல தடவைகள் பாடசாலைக்கு வருகை தந்து ஆக்கமும், ஊக்கமும் வழங்கியது மட்டுமல்லாமல் சோர்ந்து போகாமல் என்னையும் தட்டி கல்லூரியின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்கினார். 25வருடங்களாக எம் கல்லூரியில் கற்பித்த அவரது தந்தை நா. வேலுப்பிள்ளை (ஐயப்பிள்ளை மாஸ்ரர்) ஆசிரியர் அவர்களின் கனவை நிறைவேற்ற அவர் தன்னாலான பங்களிப்பை செவ்வனே கல்லூரிக்கு வழங்கியமை பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அவருடன் அவர் சார்ந்த நிர்வாகக் குழு கடந்த இக்கட்டான காலங்களிலும் மிகவும் சிறப்பாக இயங்கியமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அக்குழுவுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சந்தர்ப்பதில் கணக்காளர் திரு.தி. மார்க்கண்டு (செயலாளர், பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை) அவர் களையும் பாராட்டுகின்றேன். அவர்கள் என்னுடன் தொடர்புகளை மிக வலுவான நிலையில் கொண்டிருந்ததையிட்டு

மகிழ்வடைகின்றேன். மிக அண்மையில் கூட அவர்கள் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களையும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கௌரவிப்பதற்காக 19,000 ரூபாவை கேட்ட அடுத்த நாளே வழங்கியிருந்தமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அவர்கள் மேலும் வளர்ச்சியடைந்து கல்லூரிக்கு உதவி செய்ய வேண்டும் என உங்கள் முன்னிலையில் கேட்டுக்கொள்கின்றேன்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் சிறப்புடன் வாழ்ந்து வரும் எமது பழைய மாணவர் தங்கள் தங்கள் நாடுகளில் உடனடியாக பழைய மாணவர் சங்கங்களை அங்குரார்ப்பணம் செய்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் தாங்களும் மகிழ்வுடன் வாழவேண்டும் என்று அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக் கொள்கின்றேன்.

15.06.2010இல் கடமையேற்ற நான் இன்று வரை சுமார் 1வருடம் 04 மாதம் என்னாலான சேவைகளை இக்கல்லூரிக்கு வழங்கியுள்ளமை தாங்கள் அறிந்ததே எனது காலத்தில் கல்லூரியில் நிறைவேறப்பட்டவை பின்வருமாறு

1) மாகாணக் கல்வி அமைச்சின் உதவியுடன் மண்டபத்திற்கு 400 கதிரைகள் இடப்பட்டன.
2) கல்லூரியின் முகப்பு நீல, வெள்ளை வர்ணங்களாக மாற்றியது.
3) 2011 இல்ல விளையாட்டுப் போட்டியின்போது தசை நார்ப் பயிற்சி விளையாட்டுக்களை சேர்த்தமை
4) மிகப் பெரிய டிஜிட்டல் நூலகம்

5) நூல் நிலையத்திற்கு மேலதிகமாக ஏறக்குறைய 1600நவீன புத்தகங்களை திரு. S.K. சதாசிவம் அவர்களின் உதவியுடன் சேர்த்தமை.

6) கோட்டக்கல்வி அலுவலக கட்டடம் அமைத்தமை.

7) சமையலறை கட்டியமை

8) பழைய சமையலறைத் திருத்தம்

9) சரஸ்வதி சிலை நிர்மாணம்

10) NSB பாடசாலை அலகு நிறுவியமை

11) முச்சக்கரவண்டி திருத்தம்

12) பாடசாலை வைபவங்கட்கு பழைய மாணவரை அழைத்து கௌரவித்தமை

13) "பட்டதாரிகள்" என்ற குறுந்திரைப்படம் மாணவர்களைக் கொண்டு தயாரித்தமை. (பாராட்டுப் பெற்றது)

14) கனிஷ்ட பாடசாலை மின்னிணைப்பு

15) சித்திர, சங்கீத அறை மின்னிணைப்பு

16) கனடா காரை கலாசார மன்றத்தின் உதவியுடன் ஒரு பல்லூடாக எறி கருவி பெற்றுக்கொண்டமை

17) இன்னும் இரண்டு பல்லூடக எறி கருவி பெறப்பட்டமை. (கல்வி அமைச்சு, கொழும்பு)

18) பரிசளிப்பு விழா - 2010

19) நடராஜா மண்டப மேற்கு விறாந்தை திருத்தம்

20) சயம்பு மண்டம் கீழ்ப்பகுதி மெருகூட்டியமை. (கனடா தீசன், இடைப்பிட்டி சிவஞானம் ஆகியோரின் நிதியுதவியுடன்)

21) வடக்கு பாடசாலையின் முன்பக்கம் தாரிட்டு நடைபாதை சீமெந்து இட்டு செப்பனிட்டமை

22) வகுப்பறைகளில் White Board, Green Board பொருத்தியமை.

23) கல்வி அமைச்சின் மூலம் 5 கணிணிகள் பெற்றுக்கொண்டமை.

24) திரு. S.K. சதாசிவம் அவர்களின் முழு முயற்சியினால் விளையாட்டுப் போட்டிக்கு அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சுற்றுக்கேடயங்கள் பெற்றுக்கொண்டமை.

25) கனிஸ்ட பாடசாலைக்கு பிளாஸ்ரிக் நீர்த்தாங்கி (500L) வழங்கியமை

26) நீர்த்தாங்கிக்கு தாங்கி இரும்பால் செய்தமை

27) விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளுடன் ஆண்களுக்கான மரதன் ஓட்டமும், பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டமும் ஆரம்பித்தமை.

28) இலண்டன் காரை நலன்புரிக்கழகம் மூலம் 5 கணினிகள் திருத்தம் செய்யப்பட்டமை

29) இலண்டன் திரு. நாகேந்திரம் அவர்களின் உதவியுடன் நடன பாடத்திற்கு பெறுமதி வாய்ந்த கால்ச்சலங்கைகள் பெற்றுக் கொண்டமை

30) திணைக்கள உதவியுடன் சங்கீத அறைக்கு டிஜிட்டல் பியானோ வாத்தியக்கருவி பெற்றுக்கொண்டமை.

31) UNICEF உதவியுடன் வடக்கு பாடசாலையின் அனைத்து வகுப்புகளுக்கும் மின் இணைப்பு செய்து ஒளியூட்டியமை

32) இந்துமாமன்றம் முதன் முதலாக "இந்து தீபம்" சஞ்சிகையை வெளியிட்டமை.

33) பல்வேறு பிரிவுகளை அடையாளப்படுத்தும் பெயர்ப் பலகைகள்

34) கணினிக் கூடம், அலுவலகம் ஆகியவற்றின் அறைகள் மேலதிக பூட்டு இடப்பட்டு பாதுகாக்கப்பட்டமை.

35) அலுவலகக் கோவைகள் ஒழுங்காக்கியமையும், பாடசாலை வரைபடம் தயாரித்தமையும்.

36) பாடசாலை மாணவர்களின் ஆளுமை விருத்திக்காக பல கழகங்களை ஆரம்பித்தமை.

**மாணவர்களின் கல்வி, இணைப்பாட விதான சாதனைகள்**

01. 2010ம் ஆண்டில் 11மாணவர்கள் முதன்முறையாக பெரும் தொகையில் பல்கலைக்கழகம் சென்றமை

02. 2010ம் ஆண்டில் 03 மாணவர்கள் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றமை.

03. 2011 ஆண்டு 05 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமை

04. இரு கனிஸ்ட பிரிவு மாணவர்கள் மாகாண மட்ட பரிசில் பெற்றமை

05. காத்தாவராயன் சிந்துநடைக் கூத்து வலயமட்டம் 1ம் இடம்

06. சிறுவர் நாடகம் வலய மட்டம் 3ம் இடம்

07. செம்பு நடனம் வலய மட்டம் 2ம் இடம்

08. தனி நடனம் மாவட்ட மட்டம் இரு மூன்றாம் இடம்

09. தேசிய மட்டத்தில் கணினிக் கூடம் 18ம் இடம் சிறப்புப் பரிசில் பெற்றமை

10. கோட்ட மட்டத்தில் பல விளையாட்டுக்களில் 1ம் இடம் கால்பந்து, கிரிக்கெற் உட்பட சதுரங்கம் இரு பதக்கங்கள் பெற்றமை.

11. சதுரங்கம் இரு தங்கப் பதக்கங்களைப் பெற்றமை. (யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்)

12. வலயத்தில் முதன் முதலாக சிறவர் பாதுகாப்புக்குழு 22 மாணவர்களுடன் ஆரம்பித்தமை.

13. பௌர்ணமி தின வலயமட்ட விழாவில் தசாவதாரம் இசை நாடகம் பாராட்டுப்பெற்றமை.

14. வலய, மாகாண மட்ட கணித விஞ்ஞானப் போட்டியில் பரிசில் பெற்றமை

15. தமிழ்த்தினப்போட்டி வலய மட்டத்தில் அதிக இடங்களைப் பெற்றமை
16. கனிஸ்ட பாடசாலை வலயமட்ட கோலப் போட்டியில் 3ம் இடம்
17. வலயமட்ட திருக்குறள் போட்டி 3ம் இடம்
18. விஞ்ஞான வலயமட்ட கண்காட்சியில் பங்கு பற்றிய 07 மாணவர்களும் முதலிடம் பெற்ற சான்றிதழ் பெற்றமை
19. பல்வேறு நிறுவனங்கள் நடாத்திய சித்திரப் போட்டியில் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றமை. (வலயமட்டம், மாவட்ட மட்டம்)
20. 2010ம் ஆண்டு இலக்கிய நாடகம் மாவட்ட 3ம் இடம்

**மதிப்பார்ந்த பழைய மாணவர்களே!**

கல்லூரியின் உடனடித் தேவைகள் பின்வருமாறு

01. மைதான பார்வையாளர் அரங்கு
02. நடராசா மண்டபம் புனர் நிர்மாணம்
03. சயம்பு மண்டபம் திருத்தம்
04. மாதாமாதம் மின், தொலைபேசி கட்டணங்கள்
05. ஓட்டோ பராமரிப்பு
06. வலய, மாவட்ட மட்ட போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான அனுசரணை
07. ICT, சித்திரம்,சமயம்,விஞ்ஞானம் (ஆங்கிலம்), அரசியல் விஞ்ஞானம், விவசாய பாட ஆசிரியர்கள்.
08. நூல் நிலைய பராமரிப்பும். உதவியாளர் வேதனமும்
09. தினசரி பத்திரிகைகள்
10. கணினிக்கூட உதவியாளர் வேதனம்
11. எல்லைப்புற வேலி புனரமைப்பு
12. கணினித் திருத்தம்

13. தளபாட திருத்தங்கள்
14. அலுமாரிகள் கொள்வனவு
15. வகுப்பறைப் பூட்டுக்கள் திருத்தம்
16. மதிய உணவுக்கான எரிபொருள்
17. வருடந்தோறும்பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி அனுசரணை
18. கழக நிகழ்ச்சிகளுக்கான அனுசரணைகள்
19. பாடசாலை நிகழ்வகளை ஆவணப்படுத்தல் - அனுசரணை
20. போடடிகளை நடாத்துவதற்கான செலவு (கிரிக்கெட், கால்பந்து ஆகிய விளையாட்டுக்கான சீருடைகளை S.K சதாசிவம் மூலம் பழைய மாணவர் அன்பளிப்புச் செய்தனர்.)
21. சிற்றுண்டிச்சாலை கட்டடம், தளபாடம்.

***இச்சந்தர்ப்பத்தில்***

நூலக, கணணிக் கூட உதவியாளர்களுக்கு வேதனம் வழங்கிய இலண்டன், காரை அபிவிருத்திச் சங்கத்திற்கும், சங்கத்தின் தலைவர் திரு. நாகேந்திரம் அவர்களுக்கும், பல்வேறு உதவிகளை வழங்கிவரும் கனடா காரை கலாசார மன்றத்திற்கும், பாடசாலைக்கு பக்ஸ் இயந்திரம் வழங்கிய பழைய மாணவன் திரு. தனபாலசிங்கம் அவர்களுக்கும் வறிய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிய கொழும்பு “ஓசியானிக் இம்பெக்ஸ்” நிறுவனத்திற்கும் பல்வேறு உதவிகளை வழங்கிய பழைய மாணவர் சங்கத்திற்கும் செயலாளர் திரு.வே. சபாலிங்கம் அவர்களுக்கும், இலை மறை காய் போல மிகப்பெரிய வளங்களை வழங்கி உதவி செய்த முன்னாள் ஆசிரியர் திரு. ப. விக்கினேஸ்வரன், அவர்களுக்கும் முன்னாள் ஆசிரியர் S.K. சதாசிவம் அவர்களுக்கும் எமக்கு அருகில் இருந்து எம்மை ஊக்குவிக்கும் உதவி அரசாங்க அதிபர் திரு. R.T. ஜெயசீலன்

அவர்களுக்கும், கனடா தீசன் அவர்களுக்கும், உடனுக்குடன் அனுசரணை வழங்கும் முச்சக்கர வண்டி உரிமையர்களுக்கும், எமது கல்லூரியின் மதிப்புமிக்க சிற்றூழியர்களுக்கும், கணிணிக் கூட உதவியாளர் செல்வி சி. அமுதா, நூல்நிலைய உதவியாளர் செல்வி இ. இராசலட்சுசி அவர்களுக்கும் உங்கள் முன்னிலையில் நன்றி கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

மேலும் உலகெங்கும் வாழும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் தங்கள் நாடுகளில் சங்கங்களை அமைத்து அதனூடாக பாடசாலையின் வளர்ச்சிக்கும். சமூக வளர்ச்சிக்கும் உதவுமாறு அன்புடனும், உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றேன்.

புதிய பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு இனிவரும் காலங்களில் தன்னலங்கருதாது பாடசாலையினதும், சமூகத்தின தும் வளர்ச்சி கருதி செயற்பட வேண்டும் என்றும் அனைவரும் அதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

கல்லூரி அன்னையின் கொடி பட்டொளி வீசிப் பாரெங்கும் பறக்க அனைவரும் கைகோர்ப்போம்.

"உனக்கு நீயே உண்மையாய் இரு"

**திரு. பொ. சிவானந்தராஜா**

அதிபர், பழைய மாணவர் சங்கத் தலைவர்

யா/ கலாநிதி ஆ. தியாகரசா மத்திய மகா வித்தியாயலம்,

காரைநகர்.

**S. Vettivelautham & Co.**
**Accounting & Tax Consultants**

*359/30, Temple Road,*
*Nallur, Jaffna.*

*T.P 021 222 9733*
*Mob 0777242148*

**யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்**
**காரைநகர்**
**31.03.2005 அன்று ஐந்தொகை**

## நடைமுறைச் சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி நிலையான வைப்பு | | 500,000. 00 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு | | 205,958. 40 |
| சேமிப்புக் கணக்கு | | 7816. 91 |
| கிராமிய வங்கி | | 8107. 13 |
| காசு | | 21. 00 |

## நிலையான சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| கட்டிடம் | அட்டவணை 2 | 333,484. 00 |
| | மொத்தம் | **1055,387. 44** |

| | | |
|---|---|---|
| திரண்ட நிதி ஒதுக்கம் | | |
| 01.06.2004 மீதி | 694380. 03 | |
| செலவை விஞ்சிய வருமானம் | 360507. 41 | 1054887. 44 |
| பொருளாளர் கொடுப்பனவு | | 500. 00 |
| | | **1055387. 00** |

மேற்படி 01.06.2004 தொடக்கம் 31.03.2005 வரையிலான காலப்பகுதி ஐந்தொகை, வருமானச் செலவுக் கணக்கு கொள்ளல் கொடுத்தல் கணக்குப் பதிவுச் சிட்டை ஆவணங்களுடன் எண்பார்வை செய்து எம்மால் தயாரிக்கப்பட்டது.

**கணக்காளர்.**
**வெற்றிவேலாயுதம்.**

## யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்

### கொள்ளல் கொடுத்தல் கணக்கு 01.06.2004 தொடக்கம் 31.03.2005 வரை

**கொள்ளல்**

| | | | |
|---|---|---|---|
| மீதிகள் | | | 694,380. 03 |
| அன்பளிப்புக்கள் அட்டவணை 01 | | | 506,600. 00 |
| **அங்கத்தவர் சந்தா** | | | 4510. 00 |
| வட்டி வரவு நிலையான வைப்பு | | 53347.00 | |
| கிராமிய வங்கி | | 823.64 | 54170. 64 |
| பொருளாளர் எடுப்பனவு | | | 500. 00 |
| சிறு நன்கொடை | | | |
| திரு.ச. பாலசிங்கம் | 500 | | |
| திரு.யோ.வீரமங்கை | 1000 | | |
| திரு.அ.நமசிவாயம் | 1000 | | |
| திரு.ஆர். சபாபதிப்பிள்ளை | 1000 | | 3500. 00 |
| மொத்தம் | | | 126,3660. 67 |

## கொடுத்தல்

| | |
|---|---|
| மூலதனச் செலவு அட்டவணை 2 | 333484. 00 |
| தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு | 102100. 00 |
| பொதுக்கூட்டம் விளம்பரம் உபசாரம் | 4040. 00 |
| 2004, கணக்காய்வு கட்டணம் | 2000. 00 |
| வங்கி வரி காசோலைப் புத்தகம் | 2073. 98 |
| பூச்சாடி கொள்முதல் | 2000. 00 |
| தபால் தொலை பேசி செலவு | 2634. 00 |
| புதிய விஞ்ஞான கட்டடம் சாந்தி | 5232. 00 |
| நூலக நூல் கொள்முதல் | 5000. 00 |
| கற்றல் உபகரணங்கள் | 5000. 00 |
| அச்சடித்தல் காகிதாசிகள் | 2150. 00 |
| பான்ட் வாத்தியக்குழு சிறுகருவி / தொப்பி | 14866. 25 |
| சயம்பு திருவுருவப்படம் பிறேம் செலவு | 7000. 00 |
| ஆசிரியர் தினம், உயர்தரமாணவர் ஒன்றியம் | 5000. 00 |
| தமிழ்தினப் போட்டிகள் இசை, நாடகம், நடனம் | 17028. 00 |
| விளையாட்டுப் போட்டிகள் - அட்டவணை 03 | 23358. 00 |
| ஏனைய செலவுகள் அட்டவணை 04 | 6636. 00 |
| முச்சக்கர வண்டித் திருத்தம் | 2155. 00 |
| மீதிகள் | 721,903. 44 |
| | **1263,660. 67** |

# யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
# காரைநகர்
## வருமானச் செலவுக் கணக்கு
## 01.06.2004 தொடக்கம் 31.03.2005 வரை

**வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| வருமானம் | | |
| அன்பர்கள் அன்பளிப்புக்கள் | 506,600. 00 | |
| அங்கத்தவர் சந்தா | 4510. 00 | |
| வட்டி வரவு | 54,170 - 64 | |
| நன்கொடைகள் | 3500. 00 | |
| மொத்தம் | **568780. 64** | |

**செலவுகள்**

| | | |
|---|---|---|
| தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு | 102,100. 00 | |
| பொதுக்கூட விளம்பரம் உபசாரம் | 4040. 00 | |
| 2004 கணக்காய்வுக் கட்டணம் | 2000. 00 | |
| வங்கி வரி காசோலைப் புத்தகம் | 2073. 98 | |
| பூச்சாடி | 2000. 00 | |
| தபால் தொலைபேசி | 2634. 00 | |
| புதிய விஞ்ஞானக் கட்டடம் சாந்தி | 5232. 00 | |
| நூலக நூல் கொள்வனவு | 5000. 00 | |
| கற்றல் உபகரணங்கள் (தி. தேவராசா) | 5000. 00 | |
| அச்சடித்தல் காகிதாதிகள் | 2150. 00 | |
| பான்ட் வாத்தியக் கருவி தொப்பி | 14866. 25 | |
| சயம்பு திருஉருவப் படம் பிறேம் செலவு | 7000. 00 | |
| ஆசிரியர் தினம் | 5000. 00 | |
| தமிழ்த்தினப் போட்டி - இசை, நாடகம், நடனம் | 17028. 00 | |
| விளையாட்டுப் போட்டிகள் | 23358. 00 | |
| ஏனைய செலவுகள் | 6636. 00 | |
| முச்சக்கர வண்டி திருத்தல் | 2155. 00 | **208, 273. 23** |
| செலவு நீக்கிய வருமானம் | | **360,507. 41** |
| | | **568,780. 64** |

## யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்

**அன்பர்கள் அன்பளிப்புக்கள்.**

**அட்டவணை -01**

| | |
|---|---|
| திரு. கணேசு மயில்வாகனம் பிரான்ஸ் - (நீர்த்தாங்கி) | 100,000. 00 |
| பிரான்சு காரை அபிவிருத்திச் சங்கம் (திரு. தி. ஜெகநாதன்) | 126,600. 00 |
| இலண்டன் காரை அபிவிருத்தி சபை | 200,000. 00 |
| திரு. கார்த்திகேசு கதிர்காமநாதன் இத்தாலி | 25000. 00 |
| திரு. தியாகராசா விக்னேஸ்வரன் U.K (தொண்டர் ஆசிரியர்) | 15000. 00 |
| இலண்டன் காரை நலன்புரிச் சபை (திரு.வி. நாகேந்திரம்) | 15000. 00 |
| திரு.எஸ்.துரைச்சாமி முன்னாள் ஆசிரியர் கொழும்பு – (நூலக நூல்) | 5000. 00 |
| திரு.க. ஆனந்த மனோகரன் ஜேர்மன் (இல்ல விளையாட்டு) | 5000. 00 |
| கொழும்புக் கிளை, ப.மா.ச. (இல்ல விளையாட்டு) | 6000. 00 |
| திரு. தில்லையம்பலம் தேவராசா, கொழும்பு (கற்றல் உபகரணங்கள்) | 5000. 00 |
| கொழும்புக் கிளை, ப.மா.ச. (ஆசிரியர் தினம்) | 2000. 00 |
| வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் (கனிஷ்ட பிரிவு விளையாட்டு) | 2000. 00 |
| மொத்தம் | **506,600. 00** |

## 2. மூலதனச் செலவு

| | |
|---|---|
| நீர் தாங்கிக் கட்டிடம் | 115, 830. 00 |
| புதிய கட்டடம் நிலை கதவு ஜன்னல் கதவு பூட்டு | 99, 560. 00 |
| ஏனைய கட்டிடம், நூலகம் சமையலறை | 118, 094. 00 |
| | **333, 484.00** |

**3 விளையாட்டுப் போட்டிகள்**

| | |
|---|---|
| மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி பிரயாணம் | 5578. 00 |
| தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி | 7300. 00 |
| விளையாட்டு வீரர் சப்பாத்து | 2510. 00 |
| உடற்பயிற்சியாளர் கொடுப்பனவு | 5000. 00 |
| இல்ல விளையாட்டுப் போட்டி (கனிஷ்ட பிரிவு) | 2970. 00 |
| | **23358. 00** |

**4 ஏனைய செலவுகள்**

| | |
|---|---|
| திருமண வாழ்த்து | 400. 00 |
| மலசலகூடம் திருத்தம் | 1300. 00 |
| கிணறு இறைத்தல் | 800. 00 |
| சரஸ்வதி பூசை | 536. 00 |
| விருந்துபசாரம் | 2350. 00 |
| சமையல் உதவியாளர் | 1250. 00 |
| | **6636. 00** |

**5 மீதிகள்**

| | |
|---|---|
| இலங்கை வங்கி நிலையான வைப்பு | 500,000. 00 |
| நடைமுறைக் கணக்கு இலங்கை வங்கி | 205,958. 40 |
| சேமிப்புக் கணக்கு | 7,816. 91 |
| கிராமிய வங்கி | 8,107. 13 |
| காசு | 21. 00 |
| | **721,903. 44** |

**யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்**
**காரைநகர்**

## 31.03.2006 அன்று ஐந்தொகை

**நடைமுறைச் சொத்துக்கள்**

| | | | |
|---|---|---|---|
| இலங்கை வங்கி நிலையான வைப்பு | | | 500,000. 00 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு | | | 157,373. 44 |
| இலங்கை வங்கிச் சேமிப்புக் கணக்கு | | | 7816. 91 |
| கிராமிய வங்கி | | | 207,322. 19 |
| காசு மீதி | | | 21. 50 |

**நிலையான சொத்துக்கள்**

| | | | |
|---|---|---|---|
| கட்டிடம் மீதி | | 333,484.00 | |
| நடப்பு வருடம் கட்டடம் | 3 | 419,998.00 | 753,482. 00 |
| மொத்தம் | | | 1626,016. 04 |

**திரண்ட நிதி ஒதுக்கம்**

| | | |
|---|---|---|
| 01.04.2005 மீதி | 1054,887. 44 | |
| செலவை விஞ்சிய வருமானம் | 571128 . 60 | 1626,016. 04 |
| | | 1626,016. 04 |

மேற்படி 01.04.2005 தொடக்கம் 31.03.2006 வரையிலான காலப்பகுதி ஐந்தொகை வருமானச் செலவுக் கணக்கு கொள்ளல் கொடுத்தல் கணக்கு யாவும் உரிய கணக்குப் பதிவுச் சிட்டை ஆவணங்களுடன் எண்பார்வை செய்து எம்மால் தயாரிக்கப்பட்டது.

**கணக்காளர்**
**சி. வெற்றிவேலாயுதம்.**

## யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
## காரைநகர்
### கொள்ளல் கொடுத்தல் கணக்கு 01.04.2005 தொடக்கம் 31.03.2006 வரை

### கொள்ளல்

| | | |
|---|---|---|
| மீதிகள் 01.04.2005 | | 721,903. 44 |
| அன்பர்கள் அன்பளிப்புக்கள் | அட்டவணை 01 | 736,632. 00 |
| சயம்பு மலர் வருமானம் | அட்டவணை 02 | 380923. 00 |
| கிராமிய வங்கி வட்டி வரவு | | 395. 06 |
| மொத்தம் | | **1839,853. 50** |

### கொடுத்தல்

| | | | |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | அட்டவணை 03 | 419,998. 00 | |
| முச்சக்கரவண்டிப் பராமரிப்பு | | 4270. 00 | |
| தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு | | 126700. 00 | |
| மாணவர் மதிய உணவு உதவியாளர் | | 22526. 00 | |
| கல்லூரி பரிசளிப்பு விழா செலவு | | 44034. 00 | |
| சயம்பு மலர் வெளியீட்டுச் செலவு | | 266605. 00 | |
| பூச்சாடிகள் கொள்வனவு | | 2760. 00 | |
| மாவட்ட போட்டி போக்குவரத்துச் செலவு | | 2380. 00 | |
| க.பொ.த. சாதாரணம் தீவகம் முதலிடம் யாழ் 16 வது ஆசிரியர் கௌரவிப்பு | | 11664. 00 | |
| தபால் மின்னஞ்சல் செலவு | | 1259. 00 | |
| அமரர் மு. இளையதம்பி முன்னாள் உப அதிபர் நினைவு தினம் | | 5016. 00 | |
| மாணவர் குடிநீர் மணிவாசக அன்னதான சபை | | 2445. 00 | |
| மாணவர் கழுத்துப்பட்டி முற்பணம் | | 30000. 00 | |
| டாக்டர் ஆ. தியாகராஜா நினைவு தின விளம்பரம | | 1560. 00 | |
| புதிய கட்டடம் சாந்தி | | 4388. 00 | |
| நீர்க் குழாய் திருத்தம் | | 2099. 00 | |
| துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் அமைத்தல் | | 6650. 00 | |
| விளையாட்டுப் போட்டி | | 8000. 00 | |
| மின் இணைப்பு | | 765. 00 | |
| சேவை நலம் பாராட்டு செல்வி. அ.வைரமுத்து | | 2000. 00 | |
| வங்கிச் செலவு வரி | | 1700. 46 | |
| பொருளாளர் வங்கி கொடுப்பனவு | | 500. 00 | 967319.46 |
| மீதிகள் | | | 872534.04 |
| | | | **1839853.50** |

## யா / கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
## காரைநகர்
### வருமானச் செலவுக் கணக்கு 01.04.2005 31.03.2006

**வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| அன்பர்கள் அன்பளிப்பு | அட்டவணை 01 | | 736632. 00 |
| சயம்பு மலர் வருமானம் | | | 380,923. 00 |
| கிராமிய வங்கி வட்டி | | | 395. 06 |
| | | | **1117, 950.06** |
| | மொத்தம் | | |

**செலவுகள்**

| | | |
|---|---|---|
